5. ஈச்வர தத்துவம் (Defining God)

5.1 அஸந்நேவ ஸ ப$_4$வதி அஸத்$_3$ ப்ரஹ்மேதி வேத$_3$ சேத்|
அஸ்தி ப்$_3$ரஹ்மேதி சேத்$_3$ வேத$_3$ | ஸந்தமேநம் ததோ விது$_3$: ||

- தைத்ரீய ஆன்நதவ்ல்லீ 6-1

ப்ரஹ்ம அஸத்$_3$ இதி வேத$_3$ சேத் - ப்ரம்மத்தை இல்லை என்று அறிபவன், அஸத்$_3$ ஏவ ஸ ப$_4$வதி - இல்லாதவனாய் அவன் ஆகிறான்.
ப்ரம்மத்தை அறிவது என்பது இல்லையாகில் ஒருவன் இருந்தும் இல்லாதவனே! ப்ரம்மத்தை அறிவது என்பது உள்ளவனாகில் அவனை உள்ளவனாகவே எல்லோரும் அறிவர்.
ஆகவே ப்ரம்மத்தை அறிய இங்கே ஆரம்பம்.

5.2 உணர்ந்து உணர்ந்து இழிந்து அகன்று
உயர்ந்து உருவியந்த இந்நிலைமை
உணர்ந்து உணர்ந்து உணரிலும்
இறைநிலை உணர்வது அரிது உயிர்காள்
உணர்ந்து உணர்ந்து உரைத்து
அரி அயன் அரன் என்னும் இவரை
உணர்ந்து உணர்ந்து உரைத்து உரைத்து
இறைஞ்சுமின் மனப்பட்டது ஒன்றே

- நம்மாழ்வார், திருவாய்மொழி 1-3-6

ஆத்மா அணுவானது. உடலைவிட வேறு. அதன் இயற்கையான ஞானம் எங்கும் பரந்துள்ளது. கல்வி, கேள்வி, யோகங்கள் மூலம் ஜீவாத்ம ஸ்வரூபத்தை ஒருக்கால் அறியலாம். ஆனால் ஈச்வர தத்வத்தை அறிவது எளிதில்லை. ஈச்வரனை இன்னான் என்று வரையறுக்க முடியாது. மூவரில் ஒருவன் அவன் எனினும் அம்மூவருள்ளும் உள்ளவன் நாராயணன் என்பதை ப்ராமாணத்தைக் கொண்டு அறிந்து அவனை அடைவீர்!

5.3 பகவான்தான் ப்ரமேயம். அவனைக் காட்டும் வேதங்களே உயர்ந்த மூல ப்ரமாணம். அந்த வேதங்களின் முடிவை மற்ற எந்த ப்ரமாணத்தாலும் மறுக்க முடியாது.

5.4 ஏஷாது தோஷ ரஹிதா மஹிதா புராணி

கூரத்தாழ்வான், சுந்தரபாஷ்யஸ்தவம்

ப்ரத்யக்ஷம், அனுமானம் போன்ற ப்ரமாணங்கள் சில சமயம் ஏமாற்றும். ஆனால் வேதமோ அநாதி. நித்யம். நிர்தோஷமானது. அபௌருஷயம்.

5.5 *யதோ வாசோ நிவர்த்தந்தே |*
அப்ராப்ய மநஸா ஸஹ |
ஆநந்த3ம் ப்ரஹ்மனோ வித்3வாந்
ந பி4பே4தி குதஶ்ச நேதி ||
- தைத்ரீய உபனிஷத், ஆனந்தவல்லீ 9-1

வேதங்கள் கோஷிக்கும் பரபிரம்மம் ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே. அந்த ப்ரம்மத்தை அளவை அறிய இயலாது தோற்றுத் திரும்பின அவையும்.

5.6 *நாராயண பரம் ப்3ரஹ்ம தத்வம் நாராயண பர:*
நாராயண பரோ ஜ்யோதிர் ஆத்மா நாராயண: பர: |
யச்ச கிஞ்சித் ஜக3த்யஸ்மிந் த்3ருஸ்யதே ஸ்ருயதேऽபி வா|
அந்தர் ப3ஹிஸ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி2த: ||
நாராயணனே பரப்பிரம்மம். பரதத்வம். பரஞ்சோதி. பரமாத்மா. உலகில் காண்பதும் கேட்பதுமான அனைத்திலும் உள்ளும் வெளியும் வியாபித்திருப்பவன் நாராயணன்.

5.7 *பரமாத்மா ச ஸர்வேஷாம் ஆத4ர: பரமேஶ்வர: |*
விஷ்ணுநாமா ஸ வேதே4ஷு வேத4ாந்தேஷு ச கீ3யதே ||
- பராசர ரிஷி, விஷ்ணு புராணம் 6-4-40

பரமாத்மாவே ஸர்வ ஆதாரம். அவனே ஈச்வரன். வேதங்களும், வேதாந்தங்களும் அவனை விஷ்ணு என புகழ்கிறது.

5.8 *நாராயண பரா வேத3ா தே3வா நாராயணங்க3ஜா: |*
நாராயண பரா லோகா நாராயண பரா மக2ா: ||
- வியாஸ பகவான், பாகவதம் 2-5-15

வேதங்கள் நாராயணனை சொல்பவை. தேவர்கள் நாராயணனின் அங்கத்திலிருந்து தோன்றியவர்கள். உலகங்கள் நாராயணனைப் பற்றியே இருப்பவை. யாகங்கள் எல்லாம் நாராயணனையே ஆராதிப்பவை.

5.9 *ஸ்ருதி, ஸ்மிருதி, இதிஹாஸ, புராணங்கள், ஆகமங்கள், தர்சனம்* என்ற ஆறும் அடிப்படை அம்சங்கள் *தர்சனம்* என்பது வேதத்தில் உள்ளதை கண்டு அறியும் முறை. இது *ஷட் தர்சனம்* என ஆறுவகை.

5.10 *நியாயம் - கௌதம ரிஷி, வைசேஷிகம் - கநாட ரிஷி, ஸாங்க்யம் - கபில ரிஷி, யோகம் - பதஞ்சலி, மீமாம்ஸம் - ஜைமினி, வேதாந்தம் - வியாஸ* பகவானாலும் சொல்லப்பட்டன

5.11 பரப்பிரம்மம், ஆதிமூலம், ஜகத் காரணத்வம், ஸர்வ ஸ்வாமி, ஸர்வ நியாந்தா என்பது ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே என்பதை வேதாந்தம் ஒன்றே அறுதியிட்டது.

5.12 *மீமாம்ஸம்* (Enquiry, investigation, examination), வேதாந்தத்தை போலவே பல இடங்களிலும் நாராயணனின் பரத்வதவத்தை சொன்னது. இந்த இரண்டிற்கும் தொடர்பு உள்ளது. மீமாம்ஸத்தையும், வேதாந்தத்தையும் சேர்த்து ஒன்றாக *பூர்வ, உத்தர மீமாம்ஸம்* என அழைக்கிறோம்.

5.13 *பூர்வ (கர்ம) மீமாம்ஸா* (16 அத்யாயங்கள் Ritualisitc components) *கர்மத்தையும்* (virtue, morality, duty) *உபாஸனத்தையும்* (Bhakthi, prayer) சொல்கிறது. வேதத்தில் உள்ள கர்ம காண்டத்தில் எழும் சந்தேகங்களைத் தீர்க்கிறது.

5.14 *உத்தர (ப்ரம்ம, சாரீரக) மீமாம்ஸா ஞானத்தை* (knowledge about Brammam) சொன்னது. உபனிஷத்துக்களில் உள்ள சந்தேகங்களைப் போக்குகிறது. இது வியாஸ பகவான் அருளிய *ப்ரம்ம சூத்தரம்*.

5.15 *ப்ரம்ம சூத்திரம்* என்பது 4 அத்யாயங்கள், 16 பாதங்கள், 156 அதிகரணங்கள், 545 சூத்திரங்கள். ப்ரம்ம சூத்திரம் என்பது ப்ரம்மத்தை பற்றி சுருக்கமான வார்த்தைகள் (aphorisms)

5.16 ப்ரம்மத்தை வேதாந்தங்களைக் கொண்டே விசாரிக்க வேணும். (Exploration of the Supreme Soul). வேதாந்தங்களைக் கொண்டு ப்ரம்மத்தை மட்டுமே விசாரிக்க வேணும். மற்றதை அல்ல.

5.17 ப்ரம்ம சூத்திரம் முதல் அத்யாயம் *ஸம்ந்வய அத்யாயம்*- ஸ்ரீயப்பதியே பரப்பிரம்மம். அவனே ஜகத் காரணத்வம். ஆக்கி, அளித்து, அழிப்பது ப்ரம்மமே என்றது

5.18 ப்ரம்ம சூத்திரம் 2ம் அத்யாயம் *அவிரோத அத்யாயம்*. இதில் மற்ற மதங்களின் கொள்கைகள் (principles) தவறு. அவை வேதத்திற்கு முரண் (contradicting) என்று சொல்லி ப்ரம்மம் ஒன்றே *உபாதான, நிமித்த, சஹகாரி* காரணம் (Material, Maker, Machine) என்றது.

5.19 ப்ரம்ம சூத்திரம் 3ம் அத்யாயம் *ஸாதனா அத்யாயம்*. அந்த ப்ரம்மத்தை அடைய வழிகளைச் (பக்தி, ப்ரபத்தி) சொன்னது.

5.20 ப்ரம்ம சூத்திரம் 4ம் அத்யாயம் *பலா அத்யாயம்*. அதில் ப்ரம்மத்தை அனுபவிப்பதைச் சொன்னது.

5.21 ஸ்ரீ*பாஷ்யம்* என்பது எம்பெருமானார் அருளிய *பிரம்ம சூத்திர வியாக்யானம்*. இது பேதத்திற்கும் அபேதத்திற்கும் இடைப்பட்ட கடக ஸ்ருதியைக் கொண்டு, ஆழ்வார்களின் திவ்ய பிரபந்தங்களின் துணையோடு விசிஷ்டாத்வைதத்தை நிலை நிறுத்துகிறது. இறைவன் *சகுணப்ரம்மம்* என்றார்.

5.22 *ஏகமேவாத் அத்விதீயம், ஏகோ ஹ வை நராயண ஆஸீத்* போன்ற வாக்யங்கள் இந்த ஈச்வரன் ஒருவனே. தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன்.

5.23 இப்படி உயர்ந்தவனே எல்லயிலா பெருமையும் (*ப்ருஹத்வம்*), பெருக்குவது (*ப்ருஹ்ணத்வம்*) கொண்ட *ப்ரஹ்மம்*. இது *காரண இடுகுறிப்பெயர்*. எம்பெருமானுக்கே நிருபாதிகமாக இந்த ப்ருஹத்வமும், ப்ருஹ்ணத்வமும் வேதங்கள் பல இடங்களில் சொல்கின்றன. அந்த குணங்கள் ஸ்ரீயப்பதிக்கே பொருந்துவதால் அவன் ஒருவனே ப்ரஹமம். மற்றவை உபசார வழக்கு.

5.24 கர்ம மீமாம்ஸை முடிவிலும் விஷ்ணுவே ப்ரப்பிரம்மம் என்றது. அவனே ஸத், அஸத், அவ்யாக்ருதம், ப்ரஹ்மம், ஆத்மா, ஆகாசம், பிராணன், சிவன், நாராயணன் என்ற சப்தங்களால் பொதுபெயராகவும், சிறப்புப்பெயராகவும் சொன்னது.

5.25 ஸ்ரீயப்பதியான நாராயணன் ஒருவனே பரப்ரம்மம். இது உயர்ந்த *பர தத்துவம்*. மற்றவை எல்லாம் *அவர தத்துவம்*. இவனை *ஸ்வரூப, ரூப, குண, விபுதிகளால்* அறிகிறோம்.

5.26 நான் (அஹம்) என்பது ஆத்மா. உடல் இல்லை. தேகத்தையே ஆத்மா என எண்ணி மயங்குவது தேஹாத்ம ப்ரமம்.

அஹம் ஆத்மா ந தேஹோஸ்மி விஷ்ணு ஸேஷ: அபரிக்ரய:
த்வம் ஏவ சரணம் ப்ராப்த: தத் கைங்கர்ய சி கிரிஷ்ய:

-

வேறான உயிர் என்னும் யான் என்பது
மாறாமல் மாதவனுக்கே அடிமை என்றும்
கோணாமல் அடைந்தேன் கேசவன்தாள் சரணம்
வீணாத பலன் அவன்பணி எனக்கின்றியே.

- ஆறும் பேறும்

5.27 இவனைப்போல ஈச்வரனும் ஒரு ஆத்மா (soul). இவன் ஜீவாத்மா. ஈச்வரனோ பரமாத்மா.

5.28 *பரமாத்மா* என்பது திருவுடன் கூடிய நாராயணன் என்னும் மிதுனம். அது ஒன்றே ஒன்று. ஆனால் ஜீவாத்மாக்களோ கணக்கற்றவை (infinite). ப்ரம்ம ருத்ராதிகள் உள்பட அனைத்து ஆத்மாக்களும் ஜீவாத்மாக்களே.

5.29 *ஆத்மா* என்பது ஒரு பொருளின் உள் புகுந்து, பிரியாது நின்று, அப்பொருளை தன்னிச்சையால், தனக்கே பயன் படுத்திக் கொள்ளும் அறிவுடைய வஸ்து (Inside, Inseparable, Its own use, Independently as it wish, Intelligent)

5.30 *யஸ்ய சேதனஸ்ய*
யத் த்ரவ்யம் ஸர்வாத்மனா ஸ்வார்த்தே நியந்தம் தாரயித்தம் ச
ஸக்யம் தத் ஸேஷதைக ஸ்வரூபம் ச
தத் தஸ்ய சரீரம்

- பகவத் ராமானுஜர், ஸ்ரீபாஷ்யம்

ஜீவாத்மா என்பது உடலில் உள்ளே புகுந்து, ப்ராணன் போகும்வரை அந்த உடலைப் பிரியாது நின்று (Supports eternally) அதை தன் விருப்பப்படி (Controls) தனக்கே உபயோகித்து கொள்கிறது (owns).

5.31 *ப்ரதக் ஸித்தி அநார்ஹ ஆதார ஆதேய பாவா:*

நியந்த்ரு நியாம்ய பாவா:
ஸேஷி ஸேஷ பாவாஞ்ச:
- பகவத் ராமானுஜர், வேதார்த்த ஸங்க்ரஹம்

Supporter-suported, Contoller-Controlled, Ruler-ruled

5.32 ஆஸேஷ சிதசித் வஸ்து ஸேஷிணே ஸேஷ ஸாயினே
நிர்மலானந்த கல்யாண நிதயே விஷ்ணவே நம:
- பகவத் ராமானுஜர், வேதார்த்த ஸங்க்ரஹம்

ஒன்று விடாமல் அறிவுள்ள, அறிவற்ற பொருட்கள் எல்லாவற்றையும் ஆள்பவனே! ஆதிஸேஷனாகிய படுக்கை உடையவனே. குற்றமற்ற, அளவற்ற நற்குண நிதியே! எங்கும் நிறைந்தவனே உனக்கு நமஸ்காரம்.

5.33 அஸேஷ சித சித் ப்ரகாரம் ப்ரம்மம் ஏகம் ஏவ தத்வம்
- ஸ்வாமி தேசிகன் தத்வ முக்தா கலாபம்

சேதனா சேதனங்களை தனக்கு பிரிக்க முடியாத சரீரமாய் கொண்ட ப்ரம்மம் என்பது ஒன்றே.

5.34 உடல் மிசை இயிர் என கரந்து எங்கும் பரந்துளன்
- நம்மாழ்வார், திருவாய்மொழி 1-1-7

ஈச்வர தத்துவம் காலத்தைக் கடந்தது. சேதனா சேதனங்களை தனக்கு பிரிக்க முடியாத சரீரமாக உடையது. (Supreme being is the inner abiding soul of the entire universe, animate and inanimate)

5.35 அமைவுடை அமரரும் யாவையும் யாவரும் தானாய்
அமைவுடை நாரணன் மாயையை அறிபவர் யாரே?
- நம்மாழ்வார், திருவாய்மொழி 1-3-3

அறிவற்ற, அறிவுள்ள பொருள்களுக்கு விசேஷணங்கள் ஆகும்படி தானாய் ஆகுபவனே நாராயணன்.

5.36 நித்யோ நித்யானாம் சேதனச் சேதனானாம்
ஏகோ பஹூனாம் யோ விததாதி காமன்

அவன் நித்யமான ஆத்மா. சேதனர்களுக்கு எல்லாம் சைதன்ய ஸ்தானாமான ஆத்மாவாய் இருப்பவன். அவ்ன் ஒருவனே எல்லோரின் விருப்பங்களை நிறைவேற்றி வைக்கிறான்.

5.37 பகவான் விசேஷ்யம். சித், அசித் என்பவை விசேஷணம். இந்த விசேஷ்யமும் விசேஷணமும் சேர்ந்ததுதான் விசிஷ்டம். அது பிரிக்க முடியாத உறவு. இது ப்ருதக் ஸித்தி விசேஷணம்.

5.38 *நிலை தந்த தாரகனாய் நியமிக்கும் இறைவனுமாய்*
இலது ஒன்று எனா வகை என்று தனது என்னும் எந்தையுமாய்
துலை ஒன்று இலை என நின்ற துழாய் முடியான் உடம்பாய்
விலையின்றி நாம் அடியோம் வேதியர் மெய்ப்பொருளே
ஸ்வாமி தேசிகன், அதிகார ஸங்கிரகம் 10

சேதனா சேதனங்களை பிரிக்கமுடியாத உறவாய் தனக்கு சரீரமாக கொண்ட ப்ரம்மம் ஒன்றே. இதுதான் சாரீரக சாஸ்திரம். விசிஷ்டாத்வைத ப்ரதான ப்ரதி தந்த்ரம்.

5.39 சேதனா சேதனங்கள் தாங்கப்படுபவை (*தார்யம்*). பகவான் தாங்குபவன் (*தார்த்தன்*) இது போலவே ஒத்தவை.

- *நியாமியம்-நியாமகன்*(Control-controller)
- *விசேஷணம்-விசேஷ்யம்*
- *அம்சம்-அம்சி* (part-whole)
- *ப்ரகாரம்-ப்ரகாரீ* (attribute or mode-substance)
- *சரீரம்,-சரீரி* (body-indweller)

5.40 *விசிஷ்டம்* என்பது முழுமையானது. *விசிஷ்டாத்வைதம்* என்பது வேற்றுமை பண்பு கொண்ட இரண்டல்லாதது. விசிஷ்டஸ்ய அத்வைதம் (Reality is one as qualified by pluarlity).

5.41 ஆக ஆத்மா வேறு. சரீரம் வேறு. ஆத்மா அழியாதது. சரீரம் அழிவது. (அழிவு என்பது ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலை மாறுவது). *ஸ்வரூப லக்ஷணம்* (inherent nature) ஆத்மாவைச் சொல்லும். *ரூப லக்ஷணம்* உடலைச் சொல்லும்.

5.42 ஈச்வரனின் *ஸ்வரூபம்* என்ன? *சரீரம்* என்ன? ஈச்வரனின் ஸ்வரூபத்தை *திவ்ய ஆத்ம ஸ்வரூபம்* என்றும் அவனது திருமேனியை *திவ்ய மங்கள விக்ரஹம்* என்பர். அதை எப்படி அறிவது?

5.43 *ஈச்வரனின் ஸ்வரூபமானது* ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தைப் போல ஞானமானது. ஸ்வயம் ப்ரகாசமானது. நித்யமானது. அது திவ்யாத்ம ஸ்வரூபம்.

5.44 பரமாத்ம ஸ்வரூபம் *விபுத்வமானது*. அணுத்வம் (finite) இல்லை. இது இல்லாத இடம் ஒன்றும் இல்லை என்கிறபடி எல்லா இடங்களிலும் வியாபித்து உள்ளது.. அதனால் இது விபு.

5.45 ஈச்வர தத்வம் எங்கும் பரந்துள்ளது. இது நிறமற்றது. அதனால் கண்ணால் காண முடியாது. ஸ்பர்சமற்றது. அதனால் தொட்டு உணர முடியாது. அது போல மற்ற இந்திரியங்களால் இதை அறிய முடியாது.

5.46 அப்படி என்னில் இந்த பரமாத்வை எப்படி அறிவது?

நாயமாத்மா ப்ரவசநேந லப்4ய:
ந மேத4யா ந ப3ஹீ நா ஶ்ருதேந |
யமேவைஷ வ்ருணுதே தேந லப்4ய:
தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் ||
கடோபனிஷத் 1-2-23

இந்த பிரம்மத்தை கேள்வியாலும், மனஸ்ஸாலும், த்யானத்தாலும் அடைய முடியாது. அந்த பிரம்மம் எவனை வரிக்கிறதோ அவனுக்கு தன் திவ்யாத்ம ஸ்வரூபத்தையும், திவ்ய மங்கள விக்ரஹத்தையும் தானே காட்டுகிறது.

5.47 *கறந்த பால் உள்ளே நெய் போல*
இவற்றில் எங்கும் கண்டு கொள்வாய்
- நம்மாழ்வார், திருவாய்மொழி
தில தைல வத் தாரு அஹ்நி வத்
- பகவத் ராமானுஜர், ரங்க கத்யம்

எள்ளில் உள்ள எண்ணெயைப்போலே, அரணிக்கட்டையில் உள்ள அக்னியைபோல் இந்த உடலில் உள்ள ஆத்மாவை எம்பெருமானுடைய அருளாலேயே அறிய முடியும்.

5.48 *ப்ரம்மம் அசேதனத்தைவிட வேறானது. அசேதனங்கள்* என்பவை எப்போதும் மாறிக் கொண்டே இருக்கும் (Constantly changing). மாறும் தன்மை அதன் இயற்கை. ஆனால் பரமாத்ம ஸ்வரூபமோ என்றும் மாறாது. அதனால் அது *ஸத்யம் (உண்மையானது)* (Reality).

5.49 அசேதனங்களுக்கு தன்னைத் தானே அறிந்து கொள்ளும் அறிவு கிடையாது. ஆனால் பரமாத்ம ஸ்வரூபமோ ஸ்வயம் பரகாசம் ஆனது. வேறு துணை இல்லாமல் தன்னைத் தானே அறிவதால் அது *ஞானம்* (அறிவு) (Knowledge)உடையது.

5.50 ஜீவாத்மாவின் ஞானம் ஸங்கோஜமானது (shrunk) ப்ரகிருதி ஸம்பந்தத்தால். பரமாத்ம ஸ்வரூபமோ ஞான விகாஸமானது (அறிவின் மலர்ச்சி). *மம மாயா* இந்த ப்ரகிருதி என்னுடையது என்றான் கண்ணன் கீதையில். அதனால் ப்ரகிருதி அவனை ஒட்டாது.

5.51 *க்லேச கர்ம ஆதி அசேஷ தோஷ அஸம்ப்ருஷ்டம்*
- பகவத் ராமானுஜர், ஸ்ரீரங்க கத்யம்

எம்பெருமான் சேதனா சேதனங்களைத் தன் சரீரமாக கொண்டாலும் அவற்றின் தோஷங்கள் இவனை ஒட்டாது.
க்லேச - அகங்கார, கோப, தாபங்கள்
கர்ம - இந்த க்லேசங்களை அனுபவிக்க காரணமான புண்ய பாபங்கள். இந்த க்லேசங்களால் மேலும் உண்டாகும் புண்ய பாவங்கள்
அசேஷ - அசேதனங்களின் மாறுதல், சேதனனின் அறிவின்மை
அஸம்ப்ருஷ்டம் தோஷங்கள் ஒட்டாமலும், எதிர் காலத்திலும் பாதிக்கப்படாத பகவான்

5.52 *யாவையும் எவரும் தானாய் அவரவர் சமயம் தோறும்*
தோய்விலன் புலன் ஐந்தும் சொலப்படாமல் உணர்வின் மூர்த்தி
ஆவிசேர் உயிரின் உள்ளால் யாதும் ஓர் பற்றிலாத
பாவனை அதனைக் கூடில் அவனையும் கூடலாமே
-நம்மாழ்வார், திருவாய்மொழி 3-4-10

அசித்தினுள்ளும், ஆத்மாவுள்ளும் அந்நிலைக்கு ஏற்ப கலந்து அந்தர்யாமியாய் அமைகிறான் எம்பெருமான். ஆத்மாவிற்கு விகாரங்கள் கிடையாது. கர்மா உண்டு. ஆனால் ஜீவனின் புண்ய பாவங்கள் பரமாத்வாவை பற்றுவதில்லை.

5.53 அளவு (*பரிச்சேதம்*, measure) என்பது எல்லா பொருளுக்கும் உண்டு. கால, தேஸ, நிலை (Time, space and matter) கட்டுப்பாடு. இந்த இடத்தில், இந்த காலத்தில் இந்த ரூபத்தில் உள்ளது என்ற வரம்பிற்கு உட்பட்டது. ஆனால் பரமாத்ம ஸ்வரூபமோ இவற்றை எல்லாம் கடந்தது. அதற்கு எல்லை, முடிவு. அந்தம் இல்லை. அதனால் அது *அநந்தம்*, எல்லையிலா தன்மை (infinite).

5.54 பரமாத்ம ஸ்வரூபம் நேற்று இருந்தது. இன்று இல்லை என்பது கிடையாது. அந்த இடத்தில் இருக்கிறது. இந்த இடத்தில் கிடையாது என்பதில்லை. அது பசுவில் உள்ளது. குதிரை, மனிதனில் இல்லை என்பது கிடையாது.

5.55 ஆக, மாடும் பரமாத்மா, மனிதனும் பரமாத்மா, பறவையும் பரமாத்மா. இப்படி எல்லாமே பரமாத்மா எனில் பரமாத்மா இல்லாத பொருளே கிடையாது.

எங்கும் உளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து
இங்கு இல்லையா என்று இரணியன் தூண் புடைப்ப
அங்கு அப்போதே அவன் வீயத் தோன்றிய எம்
சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே
- நம்மாழ்வார் திருவாய்மொழி 2-8-9

5.56 ஆக, தேஸ, கால, வஸ்து பரிச்சேதம் இல்லாதது ப்ரமாத்மா. ப்ரம்மத்திற்கு பரிச்சேதமில்லை என்பதால் *ஸாமானாதிகரணம்* ஆக சொல்ல முடிகிறது. அவனே இந்திரன், அவனே ருத்ரன் என்று எல்லாம் விசேஷண விசேஷ்யமாக, அபேதமாக சொல்லும்போது

அவனே அகல் ஞாலம் படைத்திடந்தான்**
*அவனே அஃது உண்டு உமிழ்ந்தான் * அளந்தான் /*
அவனே அவனும் அவனும் அவனும்**
அவனே மற்று எல்லாமும் அறிந்தனமே*
- நம்மாழ்வார் திருவாய்மொழி 9-3-2

ஸ்ரீயப்பதியான நாராயணனையே சொல்கிறது.

5.57 அப்படி இருக்க, இன்னொரு பொருள் பரமாத்மா மாதிரியே உண்டா? எனில் அதுவும் கிடையாது.

*ஒத்தார் மிக்காரை * இலை ஆய மாமாய*
ஒத்தாய் எப்பொருட்கும் உயிராய்
- நம்மாழ்வார், திருவாய்மொழி 2-3-2

அதைவிட உயர்ந்ததோ, அதற்கு சமனோ இல்லை (nothing greater than or equal exist). அதனால் பிரம்மம் *ஸமாப்யதிக தரித்ரன்*.

5.58 *ஜன்மாதி அஸ்ய யத*: (From whom origanation etc.)
- பிரம்ம சூத்திரம் 2

அஸ்ய: இந்த ஜகத்திற்கு,
ஜன்மாதி - ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் போன்றவை

யத: - எதினிடமிருந்து ஏற்படுகிறதோ
அவை ப்ரம்மத்திற்கு லக்ஷணம் என்று உணர்க. என்று ஜகத் ஜன்மாதி காரணத்தை சொன்னது.
இம்மூன்றில் ஒவ்வொன்றும் தனித்தனியாகவே ப்ரம்மத்திற்கு லக்ஷணமாய் இருக்க மூன்றும் சொல்வது புத்தியில் தெளிவு ஏற்பட. ப்ரம்ம, விஷ்ணு, ருத்ரன் என்ற தனிக்காரணம் என்ற சந்தேகத்தை தீர்க்க.

5.59 அனந்தம் என்ற ஒன்றே ப்ரம்மத்தின் லக்ஷணத்தை சாதிக்க போதும். அந்த ப்ரம்மம் விகாரமில்லாதது என்பதற்கு ஸத்யமும், அசித் மதிரி ஞான சூன்யமில்லை என்பதற்கு ஞானம் என்பதும் சொன்னது.

5.60 *யதோ வாசோ நிவர்த்தந்தே*
அப்ராப்ய மனஸ்ஸ ஸஹ
ஆநந்தம் ப்ரம்மணோ வித்வாந்
ந பிபேதி குதஸ் ச நேதி

அந்த உயர்ந்த பரமாத்மா ஸ்வரூபம் *ஆனந்த*மானது. மகிழ்ச்சியானது (bliss). தனக்கும், மற்றோர்க்கும் அனுபவிக்க, அனுபவிக்க, தெவிட்டாத ஆராவமுதாய் இருக்கும். குறையாத கொள்ளை இன்பம் கொடுக்கும்.

5.61 மலம் என்பது அழுக்கு. ஜீவனின் அழுக்கு புண்ய பாவங்கள். பரமாத்மாவிற்கோ இந்த மலம் கிடையாது. அதனால் *அமலன்*. தூய்மையானவன். பரிசுத்தமானவன். அத்தோடு மற்றவர் அழுக்குகளை நீக்குவதால் அமலன் (Purity).

5.62 *ஸத்யம், ஞானம், அனந்தம், ஆனந்தம், அமலத்வம்* என்கிற ஐந்து குணங்களும் எம்பெருமானின் திவ்யாத்ம ஸ்வரூபத்தை மற்றவறைகளைவிட வேறுபடுத்திக் காட்டும். இத்துடன் *ஸ்ரீயபதித்வம்* சேர்ந்த ஆறும் *ஸ்வரூப நிரூபக விசேஷணம்*.

5.63 வேறுபடுத்தி காட்டும் தன்மை *விசேஷணம்*. அது ஒரு பொருளுக்கே உள்ள தனிப்பட்ட தன்மை. மற்ற எந்த வஸ்துவிலும் காணப்படாதலால் மற்ற பொருள்களை எல்லாம் விலக்கி தனிப்பட்ட முறையில் விசேஷித்து காட்டும் (For

example, fingerprint). Basic to the nature of Brammam and are His very Essence.

5.64 ஆக, ஈச்வரன் *ஸ்வரூப நிரூபக தர்மங்களை* உடையவன் (Unchanging aspect of God is denoted by intrinsic qualities)

- *ஸத்யம்* - மாறுதல் இல்லாதது (Truthfulness, firmness)
- *ஞானம்* - ஸ்வயம் ப்ரகாசமானது (omniscience)
- *அனந்தம்* - தேச, கால, வஸ்துக்களால் எல்லை அற்றது (unlimited by time, space or matter. Omnipresence)
- *ஆனந்தம்* - (bliss, everjoyful)
- *அமலத்வம்* - தோஷமில்லாமை (Blemishlessness)
- *ஸ்ரீயப்பதித்வம்* (Consort of Sree).

5.65 *திருவுடன் அமர்ந்த தெய்வ நாயகா **
*நின் திருத்தனக்கு நீ திருவாகி **
இந்து தன் நிலவுடன் இலங்கு தன்மையினை /
*நந்துதல் இல்லா நல் விளக்காகி **
*அந்தமில் அமுத ஆழியாய் நிற்றி **

- ஸ்வாமி தேசிகன், மும்மணிக்கோவை

என்று ஸாதித்தார் தேசிகன்.

நந்துதல் இல்லா	= ஸத்யம்,
நல்	= அமலத்வம்,
விளக்காகி	= ஞானம்,
அந்தமில்	= அனந்தம்,
அமுத	= ஆனந்தம்,
திருவுடன் அமர்ந்த	= ஸ்ரீயப்பதித்வம்

5.66 *அமலன் அவியாத சுடர், அளவில்லா ஆரமுதம் **
அமல உருக் குணங்கள், அணி ஆயுதங்கள் அடியவர்கள் /
*அமல அழியாத நகர், அழிந்தெழுந் காவுடன் எல்லாம் **
கமலை உடன் அரசு ஆளும், கரிகிரி மேற் காவலனே

- ஸ்வாமி தேசிகன், அருத்த பஞ்சகம் 1

மாசு, மாறுதல் இல்லாதவனும், ஞானமும், அமுதமும் நிறைந்தவனும், ரஜோ தமோ குணம் கலக்காதவனும், திவ்ய ஆபரணங்களும், ஆயுதங்களும் அணிந்தவனும், நித்யரும் முக்தரும் சூழ பரமபதத்தில் இருப்பவனே, ப்ரகிருதி எனும் சோலையில் பிராட்டியுடன் ஹஸ்திகிரி மலையில் இருந்து காப்பவன்

5.67 *அமலன் அலகிலா இன்பன்*
குறைவிலா அறிவு மாறா இறைவன்
விமலன் மற்றை குணத்துடன்
மேனியில் திருமகளை அணைவன்
தரிப்பன் அணியும் ஆயுதமும்
வானவருடன் தழைத்து இருப்பன்
அளிப்பன் அடியாருக்கு மாநகர்
தந்து களிப்பன் நம் அருளாளன்
- நெஞ்சில் அஞ்சு 1

என்று இதையே நெஞ்சில் அஞ்சில் சொன்னோம்

அமலன்	= அமலத்வம்
அலகிலா	= அனந்தம்
இன்பன்	= ஆனந்தம்
குறைவிலா அறிவு	= ஞானம்
மாறா இறைவன்	= ஸத்யம்
திருமகளை அணைவன்	= ஸ்ரீயப்பதித்வம்

5.68 *ஜ்ஞாந ஶக்தி பல ஐஶ்வர்ய வீர்ய தேஜாம்ஸ்ய ஶேஷத: |*
பகவச் சப்தவாச்யாநி விநா ஹேயைர் குணாதிபி: ||
- பராசர மஹரிஷி, விஷ்ணு புராணம் 6-5-79

ஞான, பல, ஐச்வர்ய, வீர்ய, சக்தி, தேஜஸ் என்ற ஆறு குணங்கள் உடையவன் பகவான். மற்றவரை பகவான் என்று அழைப்பது உபசாரமே. எம்பெருமான் எல்லோருக்கும் இதைக் காட்டுகிறான்.

5.69 *ஞானம்* (knowledge) - எல்லா காலத்து விஷயங்களையும் உள்ளபடி ப்ரத்யக்ஷமாய் அறிவது

5.70 *யோ வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேணே ஸதா ஸ்வதா:*
தம் ப்ரணம்ய ஹரிம் ஶாஸ்த்ரம் ந்யாயதத்வம்
- நாத முனிகள் ந்யாய தத்வம்

எவன் ஒருவன் எப்போதும் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் இன்னொரு துணையின்றி தானே அறிகிறானோ அந்த ஹரியை நமஸ்கரித்து இந்த ந்யாய தத்துவத்தை ஆரம்பிக்கிறேன் என்று ஞானமுடைய ஈச்வரனைச் சொன்னார்.

5.71 *ஶக்தி* (power) - நினைத்தை எல்லாம் செய்யும் வல்லமை. மற்றவர்களுக்கு செயல்களை செய்யும் ஆற்றலை அளித்தல்

5.72 *பலம்* (Strength) - அனைத்து பொருள்களையும் தன்னுடைய ஸங்கல்பத்தின் ஒரு சிறு பகுதியால் தாங்கும் தன்மை.

5.73 *ஐச்வர்யம்* (Lordship)- இவற்றை எல்லாம் தன் விருப்பபடி ஆக்கவும், நியமிக்கவும், அனுபவிக்கவும் உள்ள ஆற்றல். சொத்து

5.74 *வீர்யம்* (Valor)- எல்லா பொருள்களையும் தாங்கினாலும் தளராமல் இருப்பது (tiredless). களைப்பின்றி இருப்பவன். அனாயஸமாய் உள்ளவன்.

5.75 *தேஜஸ்* (Splendor) - பிறர் உதவி வேண்டாது, தன் செய்கையை யாரும் தடுக்க முடியாது என எல்லோரையும் தனக்கு கீழே அடக்கி ஆள்வது. ஒளியுள்ள பதார்த்தங்களுக்கு ஒளியை வழங்குபவன். எல்லாவற்றையும் மங்க வைக்கும் குணம்

5.76 *ய ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிக$_4$த்ஸோ அபிபாபஸ் ஸத்ய காம: ஸத்ய ஸங்கல்ப*
- சாந்தோக்ய உபனிஷத் 8-7-1

எந்த ஆத்மா பாவமற்றவனாய், மூப்பு, மரணம், துன்பம், பசி, தாகம் இல்லாதவனாய், வீணாத விருப்பத்தையும், ஸங்கல்பத்தையும் உடையவனாய் இருக்கிறானோ அவனே தேடத் தக்கவன். ஆக பகவான் *எண்குணத்தான்*.

5.77 இக்குணங்கள், பகவானின் உயர்ந்த தன்மையை காட்டியது. சேதனனைவிட இவ்வாறு உயர்ந்தவன் ஆகிலும் பரம் நீசர்களான நம்மை ரக்ஷித்து, நம்மிடம் காட்டும் மற்றைய அதிசய குணங்கள் *நிரூபித ஸ்வரூப விசேஷணம்* (Secondary/svabhava attributes. This emphasizes sesha-seshi bhaavam).

5.78 *நிரூபித ஸ்வரூப விசேஷணம்* - பகவானின் ஸ்வரூபத்தை விளக்கியபின் அவன் புகழைக் கூறுவது பல எண்ணற்ற குணங்கள். அதில் *தயை*, *ஸௌஸீல்யம்*, *க்ஷமை*, *வாத்ஸல்யம்*, *ஸௌலப்யம்* என்ற ஐந்தும் முக்கியம்.

5.79 *தயா ஹி நாம ஸ்வார்த்த நிரபேஷா பரதுக்காஸஹிஷ்ணுதா|*
- எம்பெருமானார், ஸ்ரீபாஷ்யம்

தயை (Sympathetic) - பிறர் துக்கம் சகியாது, சுயநலம் பாராது, பரிவு காட்டும் குணம் தயை.

5.80 வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்₄ருஶம் ப₄வதி து₃:க்கித₂: |
- ராமயணம் அயோத்யா காண்டம் 2-40

ராமன் மனுஷயர்களின் சோகத்தில் அவர்களை விட அதிகமாய் துன்பட்டுக் கொண்டே இருக்கிறான்.

5.81 ஸெலப்யம் (Easy accessibility) - சேதனர்கள் தன்னை எளிதில் அடையும்படி தன்னை ஆயத்தமாய் வைத்திருப்பவன். அண்டுவதற்கு எளியவன்.

5.82 யத் ப்₃ரஹ்ம கல்ப நியுதாநுப₄வேऽப்ய நாஶ்யம்
தத் கில்பி₃ஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே₄ |
ஏவம் ஸதா₃ ஸகல ஜந்மஸு ஸாபராத₄ம்
க்ஷாம்யஸ்யஹோ தத₃பி₄ ஸந்தி₄விராம மாத்ராத் ||
- கூரத்தாழ்வான், வைகுண்ட ஸ்தவம் 61

பல அயிரக்கணக்கான ப்ரம்ம கல்பங்கள் அனுவித்தாலும் நசிக்காதோ அந்த பாபத்தை இந்த சேதனன் அரை க்ஷணத்தில் செய்து விடுகிறான்.

5.83 க்ஷமை (Patience, Forbearance) - பொறுமை. சேதனர்கள் எண்ணற்ற குற்றங்களை செய்தும் செய்து கொண்டே இருக்கிறார்கள். அதற்கு தண்டனை (சிக்ஷை) விதிப்பது நியாயம். ஆனால் அந்த சேதனர்கள் நீயே கதி என்று சரணாகதி செய்தவுடன் எல்லா குற்றங்களையும் பொறுக்கிறான்.

5.84 ஶீலம் ஹி நாம மஹதோ மந்தை₃ஸ் ஸஹ
நீரந்த்₄ரேண ஸம்ஶ்லேஷ:
மிக உயர்ந்தவன், மிக தாழ்ந்தவனுடன் சரி சமமாக, தானே விரும்பி, ப்ரதிபலன் எதிர்பாராது பழுகும் தன்மை ஸௌஸீல்யம். நீசர்களாகிய நம்மை விலக்காது நம்மிடம் காட்டும் சீலம்.

5.85 ஸமோஹம் ஸர்வ பூ₄தேஷு ந மே த்₃வேஷ்யோऽஸ்தி ந ப்ரிய:
- பகவத் கீதை 9-29

எல்லா ஜீவன்களிடம் ஒரே சமமாய் நிறைந்துள்ளான். ஒன்றிடமும் பக்ஷ பாதம் இல்லை அவனுக்கு.

5.86 ஆயினும், தன்னை பற்றிய சரணாகதர்களிடத்து காட்டும் தனிப்பட்ட அன்பு *வாத்ஸல்யம்*. பசு கன்றிடமும், தாய் குழந்தையிடமும் காட்டும் அலாதியான பாசம். குற்றங்களை கண் எடுத்து பாராது அல்பமான பரிகாரங்களைக் கொண்டே அருளுவது.

5.87 *அவிஜ்ஞாதா ஸஹஸ்ராம்ஶ*:
- விஷ்ணு ஸஹர நாமம்

அடியவரின் குற்றங்களைக் காண்பதில் ஞானமற்றவனாயும் அவர்களின் நன்மையைக் காண்பதில் அளவற்ற ஞானம் உடையவனாயும் இருப்பவன்.

5.88 ஆக ப்ர ப்ரம்மம் என்பது *ஶ்ரீமந் நாராயணன்* ஒருவனே. அவன்

- *விபு* - எங்கும் பரந்து இருப்பவன்
- *அந்தர்யாமி* - ஸகல வஸ்துக்களிலும் உள்ளே இருப்பவன்
- *ஞானமயன்* - சைதன்யம் உடையவன்
- *ஸ்வதந்த்ரன்* - பிறருக்கு அடிமை ஆகாதவன்
- *ஆதி மூலம்* - எல்லாவற்றிற்கும் முழு முதல் காரணமானவன்
- *ஜகத் காரணகன்* - ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் செய்பவன்
- *ஸர்வ ஆதாரம்* - அனைத்து பொருள்களுக்கும் ஆதாரமானவன்
- *ஸர்வ நியாந்தா* - அனைத்து பொருள்களையும் நியமிப்பவன்
- *ஸர்வ ஸ்வாமி* - அனைத்தையும் தனக்கே உடையவன்
- *சரீரி* - சேதனா சேதனங்களை சரீரமாய் கொண்டவன்.
- *சரண்யன்*- எல்லாராலும் அடைக்கலம் அடையப்படுபவன்.
- *மோஷ ப்ரதன்* - மோஷத்தை அளிப்பவன்
- *ஶ்ரீயப்பதி* - திருமகள் கேள்வன்
- *ஸமஸ்த கல்யாண குணாகரன்* - மங்களமானவன்
- *அகில ஹேய ப்ரத்யநீகன்* - தீய குணங்கள் அற்றவன்.
- *ஸ்வரூபக நிரூபக தர்மம் உடையவன்* - ஸத்ய, ஞான, அனந்த, ஆனந்த, அமலத்வம் உடையவன்
- *பகவான்* - ஞான, பல, ஐச்வர்ய, வீர்ய, சக்தி, தேஜஸ் உடையவன்
- *நிரூபித ஸ்வரூப விசேஷணங்களை உடையவன்* - மற்றைய ஸௌஸீல்ய, ஸௌலப்ய, வாத்ஸல்ய குணங்களை உடயைவன்
- *பஞ்ச ப்ரகாரன்* - ப்ர, வ்யூஹ, விபவ, ஹார்த, அர்ச்சை ரூபம்

- *காருணிகன்* - பரம க்ருபை உடையவன், பரம உதாரன்
- *ஸர்வஞ்ஞன்* - இயற்கையாகவே எல்லாவற்றையும் அறிபவன்.

5.89 ஈச்வரனுக்கும், ஜீவனுக்கும் பொதுவான லக்ஷணங்கள்

- *ஆத்மத்வம்*
  - சரீரத்தோடு சேர்ந்தே இருப்பது. சரீரத்திற்கு ப்ரதி ஸம்பந்தி. ஆத்மாவை வெட்டவோ, இணைக்கவோ, நனைக்கவோ, உலர்த்தவோ, சுருக்கவோ முடியாது.
- *சேதனத்வம்*
  - அறிவுடமை. தானே ப்ரகாசிக்கக்கூடியது.
- *ப்ரத்யக்த்வம்*
  - ப்ரகாசிப்பது தனக்கே. மற்ற ஆத்மாக்களுக்கு அல்ல.
- *கர்த்ருத்வம்*
  - ஆத்மாவே காரியங்களை செய்பவர்.

5.90 ஈச்வரனுக்கும் சேதனனுக்கும் உள்ள வித்யாஸங்கள்

- ஈச்வரன் விபு - சேதனன் அணு
- ஈச்வரன் அளிப்பவன். சேதனன் - பெறுபவன்
- ஈச்வரன் ஸ்ரீயப்பதி. சேதனன் அவர்களுக்கு ஸேஷன்
- ஈச்வரன் ஸ்வதந்த்ரன். சேதனன் - பரதந்தரன்
- ஈச்வரன் ஆதாரம். சேதனன் ஆதேயம்
- ஈச்வரன் நியாந்தா - சேதனன் நியாம்யன்
- ஈச்வரன் ஸ்வாமி - சேதனன் ஸேஷி
- ஈச்வரன் மோஷம் அளிப்பவன். சேதனன் மோஷம் பெறுபவன்
- ஈச்வரன் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் செய்பவன். சேதனன் அதில் உட்பட்டவன்
- ஈச்வரன் அந்தர்யாமி - சேதனன் அணு
- ஈச்வரன் ஆராதிக்கப்படுபவன் - சேதனன் ஆராதிப்பவன்

5.91 ஈச்வரனே ப்ரணவத்தின் மூலம் அறியப்படுபவன். எல்லையற்ற கல்யாண குணங்களை உடையவன். எங்கும் பரவி இருப்பதும், தரித்து, ஏவி, ஸ்வாமியாய் இருப்பதும் ஆகிய லக்ஷணங்களால் சேதனனைவிட வேறானவன்

5.92 *அனைத்தும் நீ அனைத்துப் பொருளும் நீ*
- பரிபாடல்

அறிகிலேன் தன்னுள் அனைத்துலகும் நிற்க
நெறியாமையால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான்
- நம்மாழ்வார், திருவாய்மொழி 9-6-4

ஈச்வரன் முக்கியமான காரணம். ஸகல பொருள்களும், அவற்றின் நிலைகளும் எம்பெருமானின் ஸங்கல்பமே.

5.93 எம்பெருமான் சேதனன் உள் உறைந்து எட்டு விதமாய் அருள் செய்கிறான்

1. *கர்த்தா* - (Creator) பொருள் உள் புகுந்து படைப்பவன்
2. *ப்ரேரகன்* - (Commander) ஞானம் தந்து ஏவுபவன்
3. *அனுமந்தா* - (Approver) செயலை அனுமதிப்பவன்
4. *ஸஹகாரீ* - (Helper) துணை செய்பவன்
5. *ஸாக்ஷீ* - (Witness) பார்த்துக் கொண்டு இருப்பவன்
6. *பலப்ரதன்* - (Awards) பலன் தருபவன்
7. *பலீ* - (Enjoyer) பலனை அனுபவிப்பவன்
8. *உதாஸீனன்* - (Aloof) செயலில் தொடர்பு கொள்ளாதவன்

5.94 ஈச்வரனுடைய ஸ்வரூபத்தையும், திருக்கல்யாண குணங்களையும் அறிந்தபின் அவனுடைய ரூபம் எனும் திருமேனியை காண்போம்.
Paratvam and saulabyam

5.95 ஈச்வரனுக்கும் தேஹம் உண்டு. அது ஸுத்த ஸத்வம். மங்கள கரமானது. உலகத்து மக்கள் போல அசுபமானது இல்லை. (His body is free of all imperfections and possess brilliance, glory and infinite splendor)

5.96 திவ்யாத்ம ஸ்வரூபத்தை யோகத்தினால் பிடி கொடுத்து த்யானிக்க முடியாது. பகவானின் திவ்யமான திருமேனி உபாஸனைக்கு சுலபமாய் உள்ளது. (His divine form serves to attract the earnest devotees towards Him).

5.97 *கண்கள் சிவந்து பெரிய வாய்* வாயும் சிவந்து கனிந்து * உள்ளே*
*வெண்பல் இலகு சுடரிலகு * விலகு மகர குண்டலத்தன் /*
*கொண்டல் வண்ணன் சுடர் முடியான் * நான்கு தோளன்*
குனிசார்ங்கன்
*ஒண் சங் கதை வாள் ஆழியான் * ஒருவன் அடியேன் உள்ளானே*
- நம்மாழ்வார், திருவாய்மொழி 8-8-1

என்ற ஆனந்தமான பகவானின் திருமேனி அல்லவோ தியானிக்க விருப்பமானது.

5.98 *ஆலமா மரத்தின் இலைமேல் * ஒரு பாலகனாய் *
ஞாலம் ஏழும் உண்டான் * அரங்கத்து அரவின் அணையான் /
கோலமா மணி ஆரமும்* முத்துத் தாமும் முடிவில்லதோர் எழில்
நீல மேனி ஐயோ நிறை கொண்டது என் நெஞ்சினையே*

- திருப்பாணாழ்வார், அமலனாதிபிரான்

எம்பெருமானின் திருமேனி அழகல்லவோ மனத்தை நிறைக்கிறது

5.99 *இரு பரிதி எய்ந்த மகுடமும் எழின் மதி திகழ்ந்த வதனமும்
இருவகை இலங்கு குழைகளில் எதிர்பொர உகந்த மகரமும்
ஒரு தக உயர்ந்த திருமகள் ஒளி மறுவி மன்னு மகலுமும்
உரு அரு உமிழ்ந்த உதரமும் உலகு அடைய நின்ற கழல்களும்
மருவினிடை பொங்கு புனலென மலைகுனிய நின்ற மலையென
மருளற விளங்கும் ஒளியென மலர் அயன் உகந்த பயனென
அருவில் உறைகின்ற உயிரென அடியவர் உகந்த அமுதென
அருமறைகள் ஒன்றை அடி தொழ அருள் வரதர் நின்ற
பெருமையே*

- ஸ்வாமி தேசிகன், மெய்விரதான்மியம் 17

இப்படிப்பட்ட அர்ச்சாவதார எம்பெருமானின் வடிவழகை அனுபவிப்பதே ஆநந்தம்.

5.100 *வஞ்சனை செய் பூதனையை ,அலியும் சாட்டை
மல்லரையோர் மதகளிற்றை வானோர் அஞ்சும்
கஞ்சனை முன் கடிந்து அவனி பாரம் தீர்ந்த
காவலனே கோவலனாய் நின்ற கோவே
அஞ்சனமும் காயாவும் அனைய மேனி
அடியவர்க்கு மெய்யனே அயிந்தை வாழும்
மஞ்செனவே அருள் பொழியும் வள்ளலே
வடிவழகு மறவாதார் பிறவாதாரே*

- ஸ்வாமி தேசிகன், நவமணிமாலை 6

அப்படிப்பட்ட திருமேனி அழகை அனுபவிப்பவருக்கு மறு பிறவியும் உண்டோ?

5.101 பகவானின் ஆயுதங்களும் அப்படியே. அவை ஆபரணங்கள் போலவே. ஸம்ஸார பந்தத்தில் கட்டுண்டு திணறுபவனுக்கு

உரலில் கட்டுண்டவனை நினைத்து த்யானம் செய்வது உசிதம். ஆயுதங்கள் அழகைத் தருகிறது என்பதும் பொருந்தும்.

5.102 சேதனர்கள் கண்டு வணங்கி களிக்கவே *பர, வ்யூஹ, விபவ, ஹார்த, அர்ச்சை* ரூபங்களில் பகவான் உள்ளான். எல்லா இடங்களிலும் அவன் இருக்க, சிலையில் இருக்கிறான், சித்திரத்தில் இருக்கிறான் என்பது புறக் கண்ணுக்கு புலப்படும் வகையில் மூர்த்தி என்னும் உருவத்தில் உள்ளான்.

5.103 *பூதக ஜலம் போலே அந்தர்யாமித்வம், ஆவரண ஜலம் போலே பரத்வம். பாற்கடல் போலே வ்யூஹம். பெருக்காறு போலே விபவம். அதில் தேங்கிய மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்.*

- பிள்ளைலோகசார்யார், *ஸ்ரீ*வசன பூஷணம்

5.104 *பகவான் ஷாட்குண்ய பரிபூர்ணன்* எல்லா நிலைகளிலும். *ஞான, பல, வீர்ய, சக்தி, தேஜஸ்* ஆகிய ஆறு குணங்களோடு பூர்ணமாய். ப்ர, வ்யூஹ, விபவ, ஹார்த, அர்ச்சை என்னும் எல்லா நிலைகளிலும் உள்ளான்.

5.105 *வ்யூஹத்தில்* வாசுதேவன் மட்டும் ஆறு குணங்களையும் ப்ரத்யும்னன், அநிருத்தன், ஸங்கர்ஷணன் இவர்கள் தலா இரண்டு குணங்களை மட்டுமே உடையதால் இவர்கள் தாழ்ந்தவர்கள் என்பது பொருந்தாது. அவர்களும் ஷாட்குண்ய பர்பூர்ணரே. நான்கை மறைத்து இரண்டை மட்டும் வெளிப்படுத்துவது சேதனனின் லகு உபாஸனைக்கே.

5.106 *வ்யூஹத்தில்* சில வஸ்துக்களில் விசேஷ அபிமானம் உண்டு வாஸுதேவன் ஆறு குணங்களுடனும், ஸங்கர்ஷணன் ஜீவனையும், ப்ரத்யும்னன் மனஸ்ஸையும், அநிருத்தன் அஹங்காரத்தையும் அபிமானிக்கிறர் என்பதும் த்யானிப்பதற்கு எளிதாய் இருக்கவே. பகவான் உலகில் உள்ள எல்லாப் பொருள்களிலும் ஆத்மாவாய், எல்லாவிடத்தும் அபிமானத்துடன் இருக்கிறான்.

5.107 *வ்யூஹ* வாசுதேவன் குருவாகவும் ஸங்கர்ஷணன் சிஷ்யனாகவும் கேள்வி-பதில் மூலமாய் வித்தை பெற்றது ஸாத்வத ஸம்ஹிதையில் உள்ளது. இதனால் இந்த இருவரும் வேறில்லை.

இப்படி அபிநயம் செய்வது, நடித்து காட்டுவது *ஆசார்ய-சிஷ்ய பாவத்தை* உலகத்திற்கு உணர்த்தவே.

5.108 கடைசியாக, நம்மாழ்வார் எல்லா பொருள்களிலும் பகவான் அந்தராத்மாவாய் உள்ளான், அவனுடைய திருமேனி என்ன, அவனுடைய குணாதிசயங்கள் என்ன என்பதை ஒரு பதிகமாக வர்ணிக்கிறார்.

புகழு நல் ஒருவன் என்கோ? பொருவில் சீர்ப்பூமி என்கோ?
திகழும் தண் பரவை என்கோ? தீ என்கோ? வாயு என்கோ?
நிகழும் ஆகாசம் என்கோ? நீள்சுடர் இரண்டு என்கோ?
இகழ்வில் இவ்னைத்தும் என்கோ? கண்ணனைக் கூவுமாறே
- நம்மாழ்வார், திருவாய்மொழி 3-4-1

பங்கயக் கண்ணன் என்கோ? பவளச் செவ்வாய் என்கோ?
அங்கதிர் அடியன் என்கோ? அஞ்சன வண்ணன் என்கோ?
செங்கதிர் முடியன் என்கோ? திருமறுமார்வன் என்கோ?
சங்கு சக்கரத்தான் என்கோ? சாதி மாணிக்கதையே
- நம்மாழ்வார், திருவாய்மொழி 3-4-3
அச்சுதன் அமலன் என்கோ? அடியவர் வினை கெடுக்கும்
நச்சுமா மருந்தம் என்கோ? நலங்கடல் அமுதம் என்கோ?
அச்சுவைக் கட்டி என்கோ? அறுசுவை அடிசில் என்கோ?
மெய்ச்சுவைத் தேறல் என்கோ கனி என்கோ? பால் என்கோ?
- நம்மாழ்வார், திருவாய்மொழி 3-4-5